**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.22/2010**

2025—ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3—ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.2 நெடுவேல் வயது 45, த/பெ கோட்டீஸ்வரன்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு)**

என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.14 கிரைய பத்திரத்தில் தாவா சொத்தில் 25 சென்ட் மட்டும் முனுசாமி கவுண்டர் மற்றும் அவரின் பிள்ளைகள் மைனர் தியாகராஜன், கோட்டீஸ்வரன், பார்த்தீபன் ஆகியோர்கள் 19.10.1963ல் பிரதிவாதி கூட்டுறவு சங்கத்திற்கு கிரையம் கொடுத்தார்கள் என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து தற்போதுதான் நான் இந்த ஆவணத்தை பார்க்கிறேன் மற்றும் அதுப் பற்றி எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்த முதல் வாதி அவர் சார்பாகதான் இப்பத்திரம் பதியப்பட்டது என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது.

2. மேற்படி பத்திரத்தை என் தந்தையான முதல் வாதி படித்து பார்க்காமல்தான் தாக்கல் செய்துள்ளாரா என்றால் அவர் படித்து பார்த்தாரா இல்லையா என்பது எனக்கு தெரியவில்லை. என் தாத்தா முனுசாமி மற்றும் என் பெரியப்பா லட்சமண கவுண்டர் மேற்படி நபர்கள் பத்திரம் ஏற்பட்ட காலம் மற்றும் அதற்கு முன்பும் பிரதிவாதி கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்தார்கள் என்றால் தெரியவில்லை. பிரதிவாதி கூட்டுறவு சங்கத்தின் தற்காலிக தலைவராக என் பெரியப்பா லட்சமண கவுண்டர் இருந்து வந்தார் என்றாலும், அதன் அடிப்படையில்தான் கிரையம் பெற்றுள்ளார் என்றால் தெரியவில்லை.

3. அதேப்போல் என் தாத்தா முனுசாமி கவுண்டர் என்பவரும் மேற்படி கூட்டுறவு சங்கத்தில் 3 ஆண்டுகளுக்கு மேலாக உறுப்பினராக இருந்து வந்துள்ளதாக வா.சா.ஆ.14ல் குறிப்பிட்டுள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு சரிதான் என்று கூறினார். மேற்படி வா.சா.ஆ.14 கிரைய பத்திரத்தில் குடோன் கட்டதான் கிரையம் கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு சரிதான் என்று கூறினார். வழக்கு தாக்கல் செய்த போது தாவா சொத்து காலி இடமாக இருந்தது என்றால் சரியல்ல. பயிர் வைக்கப்பட்டிருந்தது.

4. என் தந்தையான முதல் வாதி வழக்கு தாக்கல் செய்த போது மேற்படி தாவா சொத்து செங்கல் சூளையாக இருந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். தற்போது செங்கல் சூளையாக உள்ளதா என்றால் இல்லை. பயிர் வைக்கப்பட்டுள்ளது. 23.11.2015ம் தேதி பிரதிவாதி, என் தந்தை தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து தேக்கு மரங்களை நட்டார் என்பதற்காக வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினார் என்றால் அதுப்போல் எதுவும் நடக்கவில்லை.

5. மேற்படி அறிவிப்பை பெற்று கொண்டு என் தந்தை பதில் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றால் என் தந்தை பதில் அறிவிப்பு கொடுத்திருப்பார். தற்போது தாவா சொத்தின் பட்டா, அடங்கல் யார் பெயரில் உள்ளது என்றால் என் தாத்தா முனுசாமி கவுண்டர் பெயரில் உள்ளது.

பிரதிவாதிகளாகிய 1 முதல் 3 வரையானவர்கள் 1963 ஆண்டில் மேற்படி சொத்தை கிரையம் பெற்றார்கள் என்றாலும், அதிகாரிகள் மாறி கொண்டிருந்ததால் பட்டா மாற்றம் செய்யவில்லை என்றால் சொத்தானது தாத்தா பெயரில் உள்ளது. அவ்வாறு உள்ளபோது எவ்வாறு பெயர் மாற்றம் செய்ய இயலும். 2009ம் ஆண்டு பிரதிவாதிகள் பட்டா மாற்றம் செய்ய மனு கொடுத்த போது 1ம் வாதியான என் தந்தை தடுத்து நிறுத்தி விட்டார் என்றால் அதுப்போல் சம்பவம் நடக்கவில்லை. யாரும் நிலத்திடம் வரவில்லை.

6. மேற்படி சம்பவம் தொடர்ச்சியான முதல் வாதி வழக்கறிஞர் அறிவிப்பை 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு அனுப்பினார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாகதான் என் தந்தை இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு நிலுவையில் இருப்பதால்தான் வருவாய்துறை அதிகாரிகள் பட்டா பெயர் மாற்றம் செய்யாமல் இருந்து வருகிறார்கள் என்றால் சொத்து எங்கள் பெயரில் உள்ளதால்தான் அதிகாரிகள் பட்டா பெயர் மாற்றம் செய்யாமல் இருந்தார்கள்.

7. அதன் பின்னிட்டு பிரதிவாதி கூட்டுறவு சங்கம் என் தந்தை மற்றும் முனுசாமியின் கூட்டு குடும்ப உறுப்பினர்கள் மீது இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.1/2011 வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் அழைப்பாணை பெற்று முனுசாமியின் கூட்டு குடும்ப உறுப்பினர்கள் நீதிமன்றத்திற்கு ஆஜராகவில்லை, என் தந்தை மட்டும்தான் நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கை நடத்தி வந்தார் என்றால் அழைப்பாணை என் தந்தைக்கு மட்டும்தான் வந்தது, என் தந்தைதான் 5 குடும்பங்களையும் கர்த்தா என்ற முறையில் நடத்தி வந்தார், என் தந்தைதான் நல்லது, கெட்டது, கல்யாணம் ஆகியவற்றை பார்த்து வந்தார், என் தந்தை கட்டுப்பாட்டில்தான் அனைவரும் இருந்தார்கள்.

8. என் தாத்தா முனுசாமி கவுண்டர் கூட்டு குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் 1963 மேற்படி சொத்தை 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்தது தெரிந்து விலகி விட்டார்கள் என்றாலும், என் தந்தைதான் வம்புக்கு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. என் தந்தை இறந்த பிறகு கூட்டு குடும்பத்தை யார் தற்போது பராமரித்து வருகிறார்கள் என்றால் தற்போது அனைவரும் தனித் தனியாக வசித்து வருகிறார்கள். தற்போது கூட்டு குடும்பம் கிடையாது என்றால் கிடையாது. சாட்சி தன்னிச்சையாக தர்மராஜ் என்பவர் 2000ம் ஆண்டில் காலமாகி விட்டார், அதன் பின்னிட்டுதான் நாங்கள் தனித் தனியாக வசித்து வருகிறோம்.

9. ராந்தம் என்ற கிராமமும், தெள்ளூர் கிராமம் எவ்வளவு தூரம் என்றால் 1/2 கிமீ தூரம் இருக்கும். தாவா சொத்து தெள்ளூர் கிராம ஊர் எல்லையில் வருகிறது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் வா.சா.ஆ.14 தெள்ளூர் கிராமத்தில் பல்நோக்கு கூட்டுறவு நாணய சங்கம் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி பல்நோக்கு கூட்டுறவு நாணய சங்கம் ராந்தம் கிராமத்தில்தான் உள்ளது. என் தாத்தா முனுசாமி கவுண்டர் 1963 ஆண்டு 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்தார் என்ற அடிப்படையில், என் தந்தை முனுசாமி கவுண்டரின் குடும்ப உறுப்பினர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் அவர் மட்டும் இவ்வழக்கை தாக்கல்

செய்ததன் அடிப்படையில் இவ்வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றாலும், அசல் வழக்கு 1/2011 வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றாலும் என் தந்தை குடும்ப உறுப்பினர்களை கேட்டுதான் இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பார். சாட்சி தன்னிச்சையாக 1949லிருந்து சொத்தை நாங்கள்தான் அனுபவித்து வருகிறோம். முனுசாமி கவுண்டர் மற்றும் லட்சமண கவுண்டர் எழுதி கொடுத்த பத்திரம் தவறான பத்திரம்.

மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi,
District Munsif,
District Munsif Court,
Arni.